# பெண்கள் முன்வருக

**ந**ம் திராவிட மக்களில் பெண்கள்தான் சுயமரியாதைக் கொள்கைக்கு முட்டுக் கட்டையாக இருப்பதாக ஆண்கள், பெண்கள் பேரில் பழி சுமத்துகிறார்கள். ஆகையால், தோழியர்களே! நீங்கள் பகுத்தறிவுப் பாதையில் சென்று ஆண்கள் செல்லும் பகுத்தறிவுச் செய்கையில் ஒத்துழைத்து நீங்களும் உங்கள் மக்களும் கல்வி, அறிவு, பொருளாதாரம், சுகாதாரம் முதலிய எல்லா வகையிலும் முன்னேற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம் திராவிட இயக்கத்துக்கான அடையாளச் சின்னமாக விளங்கும் கருப்புக் கொடியின் மத்தியில் சிவப்பாக உள்ளது. அந்தக் கொடி எப்படிக் கருப்பாய் இருக்கிறதோ, அதே போல் நம் வாழ்க்கையிலும் இருள் சூழ்ந்து பிற்போக்கிலும் இழிவுத் தன்மையிலும் இருந்து வருகிறோம். அந்த இழிவுத் தன்மையை ஒத்துக்கொண்டு நம் மக்கள் வாழ்க்கை, கல்வி அறிவு எல்லா வகையிலும் முன்னேற்றம் காணும்போது நம் இயக்கக் கொடியும் மாற்றமடையும்.

*– "விடுதலை" (8.5.1954)*